ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477421 +94 11 2346304
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| | |
|---|---|
| வெளியிடுபவர் | புள்ளிவிபரத் திணைக்களம் |
| திகதி | 2026.05.15 |

# இலங்கைக் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு) – 2026 ஏப்பிறல்

## கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்கள், 2026 ஏப்பிறலில் தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளில் சுருக்கத்தினை எடுத்துக்காட்டுகின்றன

**தயாரிப்பிற்கான இலங்கைக் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு – தயாரிப்பு), பருவகால கோக்கினைப் பின்பற்றி 42.6 சுட்டெண் பெறுமதியொன்றைப் பதிவுசெய்து 2026 ஏப்பிறலில் சுருக்கமடைந்தது.** புதிய கட்டளைகள், உற்பத்தி, தொழில்நிலை மற்றும் கொள்வனவுகளின் இருப்பு ஆகிய துணைச் சுட்டெண்கள் மார்ச்சில் பருவகால உச்சத்துடன் ஒப்பிடுகையில் மாத காலப் பகுதியில் வீழ்ச்சியடைந்து, சுட்டெண்ணில் ஒட்டுமொத்த வீழ்ச்சியை விளைவித்தன.

பதிலிறுப்பாளர்கள் குறிப்பிடுவதற்கமைய, குறிப்பாக, உணவு மற்றும் குடிபான தயாரிப்பு அத்துடன் புடவைகள் மற்றும் ஆடைகள் துறைகளின் தயாரிப்பில் பருவகால கேள்வி குறைவடைந்து செல்லுதல், புதிய கட்டளைகள் துணைச் சுட்டெண்ணில் சுருக்கத்திற்கு பிரதான காரணமாக அமைந்திருந்தது. உற்பத்தி துணைச் சுட்டெணில் வீழ்ச்சிக்கு சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு காலப்பகுதியில் பல தயாரிப்பு தொழிற்சாலைகள் மூடப்பட்டிருந்தமையினால் ஏப்பிறலில் குறைவான வேலை நாட்கள் பெருமளவில் காரணமாக அமைந்தன. பருவகால தொழிலாளர் தேவைப்பாடுகள் நிறைவடைந்ததைத் தொடர்ந்து தயாரிப்பாளர்கள் தற்காலிக தொழிற்படையைக் குறைத்தமையினால் தொழில்நிலை துணைச்சுட்டெண் வீழ்ச்சியடைந்தது. புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்தியில் குறைவடைதலுடன் இணைந்து கொள்வனவுகளின் இருப்பு துணைச் சுட்டெண் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, பண்டிகையுடன் தொடர்புபட்ட இடையூறுகள் மற்றும் மத்திய கிழக்கில் தற்போதைய மோதலிலிருந்து உருவாகின்ற தீவிரமடைந்த ஏற்பாட்டுச் சேவைச் சவால்களினால் உந்தப்பட்டு, நிரம்பலர் விநியோக நேரம் மேலும் நீட்சியடைந்தது.

***கொமுசு தொகுப்பு - தயாரிப்பு அளவீடு***


| மாறி | மாச். | ஏப். | +/- | போக்கு |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு – தயாரிப்பு** | **66.7** | **42.6** | **-** | **அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது** |
| புதிய கட்டளைகள் | 69.9 | 36.4 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது |
| உற்பத்தி | 68.8 | 30.5 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது |
| தொழில்நிலை | 55.9 | 47.0 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது |
| கொள்வனவுகளின் இருப்பு | 59.9 | 44.0 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது |
| நிரம்பலர்களின் விநியோக நேரம் | 75.5 | 68.7 | - | நீட்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

அடுத்த மூன்று மாதங்களுக்கான தயாரிப்பு நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் முன்னேற்றமொன்றை எடுத்துக்காட்டுகின்ற போதிலும், மத்திய கிழக்கில் தற்போதுள்ள பதற்றங்களுடன் தொடர்புடைய இடர்நேர்வுகள் மீதான எச்சரிக்கையினால் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

**கொ.மு.சு**
**தயாரிப்பு**
**2026 ஏப்பிறல்**
**42.6**

**கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**உலகளாவிய தோற்றப்பாடு:**
**கொமுசு தயாரிப்புத் தொகுப்பு**

| நாடு/அதிகார எல்லை | போக்கு |
|---|---|
| **உலகம்** | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| **இந்தியா** | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| **சீனா** | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| **ஐக்கிய அமெரிக்கா** | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| **ஐக்கிய இராச்சியம்** | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| **யூரோ வலயம்** | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்[1], 2026 மே 15அன்று உள்ளவாறு (கொமுசு வெளியீடுகள் (spglobal.com))*

[1]எஸ் அன்ட் பி குளோபல், உலகம் முழுவதும் 40 இற்கு மேற்பட்ட நாடுகளுக்கு கொமு சுட்டெண்களைத் தொகுக்கின்றது.

**பணிகளுக்கான இலங்கைக் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு – பணிகள்), 2026 ஏப்பிறலில் 46.7 சுட்டெண் பெறுமதியைப் பதிவுசெய்து, முக்கியமாக பண்டிகைக் காலத்தின் பின்னர் பருவகால தாக்கங்கள் மற்றும் வலு விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பன காரணமாக பணிகள் நடவடிக்கைகளில் சுருக்கமொன்றை எடுத்துக்காட்டுகின்றது.**

முதன்மையாக, எரிபொருள் விலைகளில் ஏற்பட்ட உயர்வு, பண்டிகைக்கால விடுமுறைகள் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் வருகையில் ஏற்பட்ட மெதுவடைதல் என்பன காரணமாக, மாதகாலப்பகுதியில் பெரும்பாலான துறைகளுக்கிடையில் வியாபார நடவடிக்கைகள் வீழ்ச்சியடைந்தன. பொருட்கள் போக்குவரத்து மற்றும் ஏனைய தனிப்பட்ட பணிகள் நடவடிக்கைகள் துணைத் துறைகள் சடுதியான சுருக்கத்தினைப் பதிவு செய்த அதேவேளை, காப்புறுதி, மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம், தங்குமிடம், உணவு மற்றும் குடிபான பணிகள் நடவடிக்கைகளும் குறிப்பிடத்தக்க சரிவுகளைப் பதிவுசெய்தன.

புதிய வியாபாரங்கள் குறிப்பாக, பொருட்கள் போக்குவரத்து, காப்புறுதி, மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம், தங்குமிடம், உணவு மற்றும் குடிபான பணிகள் நடவடிக்கைகளில் அவதானிக்கப்பட்ட சீர்குலைவு காரணமாக 2023 ஏப்பிறல் தொடங்கி முதல் முறையாக 2026 ஏப்பிறலில் வீழ்ச்சியடைந்தன.

ஒப்பந்தம் முடிவுறுதல், ஓய்வுபெறுதல்கள் மற்றும் பதவிவிலகுதல்கள் காரணமாக, 2026 ஏப்பிறலில் தொழில்நிலை வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, நிலுவையிலுள்ள பணி முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் மெதுவான வீதத்தில் காணப்பட்டபோதிலும், தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்தது.


***கொமுசு தொகுப்பு - பணிகள் அளவீடு***

| மாறி | 2026 மார்ச் | 2026 ஏப். | +/- | போக்கு |
|---|---|---|---|---|
| **கொமுசு – பணிகள் (வியாபார நடவடிக்கைச் சுட்டெண்)** | **59.4** | **46.7** | **-** | **அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது** |
| புதிய வியாபாரங்கள் | 57.6 | 48.9 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது |
| தொழில்நிலை | 54.2 | 44.4 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது |
| நிலுவையிலுள்ள பணி | 48.1 | 48.8 | + | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் | 57.1 | 65.9 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

யுத்தத்தின் முடிவினைத் தொடர்ந்து நடவடிக்கைகளில் எதிர்பார்க்கப்படுகின்ற உறுதிப்பாட்டினால் ஆதரவளிக்கப்பட்டு, அடுத்த காலாண்டுக்கான வியாபார நடவடிக்கைக்கான எதிர்பார்க்கைகள் சாதகமாகக் காணப்படுகின்றன. இருப்பினும், தோற்றப்பாடானது, மத்திய கிழக்கில் நிலவும் புவிசார் அரசியல் பதற்றங்கள் மற்றும் பரந்தளவிலான உலகளாவிய நிச்சயமற்றத்தன்மைகள் உள்ளடங்கலாக பல்வேறு இடர்நேர்வுகளுக்கு உட்பட்டதாகவிருக்கின்றது.

**கொ.மு.சு**
**பணிகள்**
**வியாபார நடவடிக்கைச் சுட்டெண்**
**46.7**
**2026 ஏப்பிறல்**



மூலம்: இலங்கை மத்திய வங்கி

**உலகளாவிய தோற்றப்பாடு: கொமுசு பணிகளின் தொகுப்பு**

| நாடு/அதிகார எல்லை | போக்கு |
|---|---|
| உலகம் | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| இந்தியா | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| சீனா | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| ஐக்கிய அமெரிக்கா | வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது |
| ஐக்கிய இராச்சியம் | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| யூரோ வலயம் | அ திகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது |

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்[1], 2026 மே 15 அன்று உள்ளவாறு (கொமுசு வெளியீடுகள் (spglobal.com))*

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**முறையியல்**

வினாக்கொத்துக்கள் தொடர்ந்துவருகின்ற மாதத்தின் முதலரையில் நிறைவுசெய்யப்படுகின்றன. ஒவ்வொரு மாறிலிக்காகவும் முன்னைய மாதத்துடன் ஒப்பிட்டு அதிகரிப்பை, வீழ்ச்சியை அல்லது மாற்றமின்மையை அறிக்கையிடுமாறும் ஏதேனும் மாற்றங்களுக்கான காரணங்களை வழங்குமாறும் பதிலிறுப்பாளர்கள் கேட்கப்படுகின்றனர். சுட்டெண் தொகுப்பும் சுட்டிகள் பற்றிய பொருள்கோடலும் எஸ் அன்ட் பி. குளோபல் அளவீட்டு முறையியலைப் பின்பற்றுகின்றன.

**கொமுசு – தயாரித்தல்,** தயாரித்தலுக்கான முதன்மைச் சுட்டெண்ணாகக் கருதப்படுகின்ற இது புதிய கட்டளைகள், வெளியீடு, தொழில்நிலை, நிரம்பலர் விநியோக நேரம் மற்றும் கொள்வனவுகளின் இருப்பு என்பவற்றின் நிறையேற்றப்பட்ட சராசரியொன்றாகும்.

பணிகள் வியாபார நடவடிக்கைச் சுட்டெண் என்பது, பன்னாட்டு ரீதியான சிறந்த நடத்தைகளுக்கமைவாக பணிகளுக்கான முதன்மைச் சுட்டெண்ணாகும். இது, **கொமுசு – பணிகள்** எனக் குறிப்பீடு செய்யப்படுகின்றது. பணிகள் வியாபார நடவடிக்கைச் சுட்டெண்ணானது தயாரித்தல் உற்பத்திச் சுட்டெண்ணுடன் ஒப்பிடத்தக்கதாகும்.

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது “வியாபித்தல் சுட்டெண்ணாக” கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

| | |
|---|---|
| கொ.மு.சு=50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது. |
| கொ.மு.சு >50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது. |
| கொ.மு.சு <50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது. |

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | | |
|---|---|---|
| தொழில்நிலை | : | நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : | உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : | கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : | பூர்த்திசெய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.